005494

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கருணை அடிப்படையில் பணி நியமனம்- திரு.சீ.விஜய் ஆனந்த் என்பவரது இளநிலை உதவியாளர் பணியினை 07.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்தல்- ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந7)துறை

அரசாணை(ப) எண். 20

நாள்: 09.02.2022
பிலவ வருடம்,
தை மாதம் 27 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2053,
படிக்கப்பட்டது.

ஆதிசனயர், ஆதி திராவிடர் நலத்துறை
18 FEB 2022
சேப்பாக்கம், சென்னை-5.

1. ஆதிதிராவிட நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.இ6/ 24297/2016, நாள்.23.07.2021.
2. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.

******

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட, ஆதி திராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டம், நத்தம் அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தபோது, 13.12.1998 அன்று பணியிடைக் காலமான திரு.ஜி.சீனிவாசன் என்பவரது மகன் திரு.சீ.விஜய் ஆனந்த் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, 07.02.2020 முற்பகல் முதல் பணி புரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்து, உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின் படி அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, வடகரை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வரும் தனியர் திரு.சீ.விஜய் ஆனந்த்,

005494



என்பவர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 07.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா.கு.எண். 16014/ட்டி1/2022 நாள்.17.09.2021 மற்றும் அ.சா.கு.எண்.39615/ஜி2/2021-1, நாள். 31.01.2022 - இல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், ஆதி திராவிடர் நலம், சென்னை-5.
திரு.சீ.விஜய் ஆனந்த், இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வடகரை,
(ஆதி திராவிடர் நல ஆணையர் வழியாக)
மாவட்டக் கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை - 18 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8

நகல்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

09/2/2022

பிரிவு அலுவலர்

9.2.2022